# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் 38

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**



டாக்டர் நடேசனார்

# நீதிக்கட்சியின் இதயம் நடேசனார்!

**ச**மூகநீதியை நிலைநாட்டும் இடஒதுக்கீட்டுக் கொள்கையைச் செயலாக்குவதில், தனித்து நிற்கிறது தமிழ்நாடு. அதற்கு முக்கிய காரணம் கடந்த நூற்றாண்டில், நீதிக்கட்சியின் வரலாற்றுப் பங்களிப்பு. நீதிக்கட்சியை உருவாக்கியவர்களில் மிக முக்கியமானவர் சி.நடேசனார். வகுப்புரிமையை நிலைநாட்டியதில் நடேசனாரின் பங்களிப்பை இக்கட்டுரையில் நினைவு கூர்வோம்.

சென்னையில் பிறந்த நடேசனார் மருத்துவர் பட்டம் பெற்று பின்தங்கிய மக்களுக்கு மருத்துவச் சிகிச்சை அளித்தார். பார்ப்பனரல்லாத வகுப்பினரின் நலனுக்காக 1912-இல் தொடங்கப்பட்ட ‘தி மெட்ராஸ் யுனைடெட் லீக்’ என்ற அமைப்பில், நடேசனார் செயலாளராகச் செயல்பட்டார். நடேசனாரின் முன்னெடுப்பில் 1913-இல் **‘தி மெட்ராஸ் யுனைடெட் லீக்’ ‘மெட்ராஸ் திராவிடர்’** சங்கமாகப் பெயர் மாற்றம் கண்டது. இங்கிலாந்து நாடாளுமன்றக் கூட்டுப் பொறுப்புக் குழுவின் முன் பார்ப்பனரல்லாதார் நிலைமை பற்றி எடுத்துரைக்க டாக்டர் நடேசனார் முயற்சியில், திராவிடர் சங்கத்தின் சார்பாக கே.வி.ரெட்டி இங்கிலாந்து சென்றார்.

வாரந்தோறும் டாக்டர் நடேசனாரின் தோட்டத்தில் திராவிடர் சங்கத்தின் சார்பில், பார்ப்பனரல்லாதார் இன எழுச்சிக் கூட்டங்களும், இலக்கியக் கூட்டங்களும் நடைபெற்று வந்தன. திராவிடர் சங்கத்தில் **‘சிந்தனைச் சிற்பி’ ம. சிங்காரவேலு, ‘திராவிட லெனின்’ டாக்டர் டி.எம். நாயர், ‘வெள்ளுடை வேந்தர்’ தியாகராயர், ‘தமிழ்த்தென்றல்’ திரு.வி.க.** போன்ற அறிஞர்கள் பங்கேற்று, சுயமரியாதை உணர்வு எழும்படி உரையாற்றியுள்ளனர். திராவிடர் சங்கத்தின் சார்பில் 1915-இல் டாக்டர் நடேசனாரின் நிதி உதவியுடன ‘திராவிடப் பெருமக்கள்’ (Dravidian Worthies), ‘பிராமணரல்லாதார் கடிதங்கள்’ (Non-Brahmin Letters) என்ற இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன.

## ‘திராவிடர் இல்லம்’ விடுதி

கல்வித்துறையில், பின்தங்கிய நிலையில் இருந்த பார்ப்பனரல்லாத வகுப்பு மாணவர்களை முன்னேற்ற நடேசனார் 1916-இல் **‘திராவிடர் இல்லம்’** என்கிற மாணவர் விடுதியைத் தொடங்கினார். இவ்விடுதியில் பொருளாதாரத்தில் பின்தங்கிய பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குத் தங்குமிடம், உணவு இலவசமாக வழங்கப்பட்டது. இங்கே தங்கிப் படித்த ஆர்.கே.சண்முகம் பிற்காலத்தில் விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் நிதி அமைச்சராக உயர்ந்தார்.

நடேசனார் முன்னின்று செயல்பட்ட **‘தி மெட்ராஸ் யுனைடெட் லீக்’, ‘திராவிடர் சங்கம்’, ‘திராவிடர் இல்லம்’** உள்ளிட்ட அமைப்புகள் சென்னை மாகாணத்தில் பார்ப்பனரல்லாத மக்களிடையே திராவிட உணர்ச்சியை உருவாக்கியது. இதே காலகட்டத்தில் பிட்டி தியாகராயர், டாக்டர் டி.எம்.நாயர் போன்றவர்களும் காங்கிரஸ் மீது ஈடுபாடும் பற்றுதலும் நம்பிக்கையும் கொண்டு உழைத்து வந்தாலும், பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை நிலைபெறச் செய்யும் வேலைகளில் காங்கிரஸ் கட்சி ஈடுபடுவதைக் கண்டிக்கவும் செய்தனர்.

சென்னை மாநகராட்சியில் உறுப்பினர்களாக இருந்த பிட்டி தியாகராயரும், டி.எம்.நாயரும் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் தெப்பக்குளத்தைச் சீரமைப்பது உள்ளிட்ட சில பிரச்சினைகளில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தனர். எதிரெதிராய் நின்ற இருவரையும் இணைத்த நடேசனார், பார்ப்பனரல்லாத மக்களின் வாழ்வுரிமைகளைக் காக்கும் பொருட்டு, தென்னிந்திய நல உரிமைச் சங்கம் எனும் அரசியல் கட்சியை உருவாக்கினார். நடேசனார் முயற்சி இல்லையானால், நீதிக்கட்சி என்றழைக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் சாத்தியமாகியிருக்காது.

## நியாயமான கல்வி - வேலைவாய்ப்பு

சென்னை சட்டமன்றத்தில் டாக்டர் நடேசனார், “பார்ப்பனரல்லாதாருக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய அரசு வேலை வாய்ப்புகள் கிடைக்கும் வகையில், அரசுப் பணிகளுக்குப் பார்ப்பனரல்லாதாரை மட்டுமே தேர்வு செய்யவேண்டும்’ என்று 05.08.1921-இல் தீர்மானம் கொண்டுவந்தார். இதன் விளைவாக 16.09.1921-இல் அனைத்துச் சமூகத்தினரும் பயன்பெறும் வகையில் மக்கள்தொகையின் அடிப்படையில், அரசுப் பணிகள் வழங்க வேண்டும் என்ற ஆணை பெரும் எதிர்ப்புக்கிடையே பிறந்தது. ஆனால், அரசு உயர் அலுவலர்கள் இவ்வாணையை நடைமுறைப்படுத்தாமல் புறக்கணித்தனர்.

அரசு அலுவலகங்களில் ஏற்படும் காலியிடங்களில் பார்ப்பனர்களே தொடர்ந்து நியமிக்கப்பட்டனர். அதனால், பார்ப்பனரல்லாதாருக்குக் கிடைக்கவேண்டிய நியாயமான வேலைவாய்ப்புகள் பறிபோயின. இந்நிலையைப்




போக்கிடும் நோக்கில் அரசுப் பணியாளர் தேர்வுக்குழுவை (Staff Selection Board) உருவாக்கவேண்டும் என்றும் பதவி உயர்வுகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்றும் வற்புறுத்தினார் டாக்டர் நடேசனார்.

சென்னை மாகாண அரசின் தலைமைச் செயலகத்தில், பார்ப்பனரல்லாதார் மிகச்சொற்ப எண்ணிக்கையில் பணியாற்றி வந்தனர். பார்ப்பன உயர் அதிகாரிகளே தலைமைச் செயலகத்தை ஆக்கிரமித்திருந்தனர். எனவே, இரு வகுப்பாருக்கும் இடையே சமநிலை ஏற்படும்வரை, 3 ஆண்டுகளுக்குப் பார்ப்பனரல்லாத சமூகத்திலிருந்தே உயர் அலுவலர்களையும் எழுத்தர்களையும் பணியில் அமர்த்த வேண்டும் என்று வலியுறுத்திய தீர்மானத்தை ஓ.தணிகாசலம் செட்டியார் முன்மொழிய, நடேசனார் வழிமொழிந்தார். இத்தீர்மானம் மிகுந்த கண்டனத்திற்குப் பின் நிறைவேறியது. அதன் காரணமாகவே தலைமைச் செயலகத்தில் பார்ப்பனரல்லாதார் நுழைய முடிந்தது.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ உரிமை கோரி நீதிக்கட்சி சார்பாக நடேசனார் ஏற்பாட்டில் நடைபெற்ற மாநாடுகளும் கூட்டங்களும் எண்ணிலடங்காதவை. டாக்டர் நடேசனார் சென்னை மாகாண சட்டமன்றத்தில் பார்ப்பனரல்லாத மக்களுக்காகக் குரல் கொடுத்துப் பல தீர்மானங்களை நிறைவேற்றி, திராவிட சமுதாயம் முன்னேறிட வழிவகை செய்தார்.

வாழ்நாளெல்லாம் பார்ப்பனரல்லாத மக்களின் முன்னேற்றத்திற்காகத் தன்னை அர்ப்பணித்த டாக்டர் நடேசனார் பெரிய பதவிகளில் இருந்ததில்லை. அவர் சென்னை மாநகராட்சித் தலைவர் பதவிக்கு 3 முறை போட்டியிட விரும்பினார். இருமுறை சர்.ஏ.இராமசாமி முதலியாருக்கும், மூன்றாம் முறை எம்.ஏ. முத்தையா செட்டியாருக்கும் விட்டுக்கொடுத்தார். அமைச்சர் பதவிக்கும் அவர் ஆசைப்படவில்லை. ஒருமுறை தேர்தலில் தனித்து நின்று வெற்றி பெற்று எதிரணியில் வீற்றிருந்த போதிலும், நீதிக்கட்சியின் கொள்கைகளைக் கைவிடவில்லை. அதுதான் அவரது நேர்மைக்கு எடுத்துக்காட்டாகும்.

டாக்டர் நடேசனார் மறைந்தபோது தந்தை பெரியார் வெளியிட்ட இரங்கல் அறிக்கை உணர்ச்சிப்பூர்வமானது. அதன் ஒரு பகுதி பின்வருமாறு:

“டாக்டர் சி.நடேச முதலியார் நலிந்தார் என்ற சேதி கேட்டு நம் நாட்டில் திடுக்கிடாத பார்ப்பனரல்லாத தமிழ்மக்கள் எவரும் இருக்கமாட்டார்கள். அவரது சேவையைப் பாராட்டி அவருக்கு நன்றி விசுவாசம் காட்டக் கடமைப்படாத தமிழ்மகன் எவனும் எந்நாட்டிலும் இருக்கமாட்டான். தோழர் நடேச முதலியாரிடம் உள்ள அருங்குணங்களில் சூது, வஞ்சகம் அற்ற தன்மையே முதலாவதும் இரண்டாவதும் மூன்றாவதுமாகும்.

‘சூதற்றவனும், வஞ்சகமற்றவனும் உலகப் போட்டியில் ஒரு நாளும் வெற்றி பெறமாட்டான்’ என்கிற தீர்க்கதரிசன ஆப்த வாக்கியத்திற்கு எடுத்துக்காட்டாக இருந்த நடேசனார் அவர்கள், தனது தொண்டிற்கும், ஆர்வத்திற்கும்,

**“தோழர் நடேச முதலியாரிடம் உள்ள அருங்குணங்களில் சூது, வஞ்சகம் அற்ற தன்மையே முதலாவதும் இரண்டாவதும் மூன்றாவதுமாகும்”.**

உண்மையான கவலை கொண்ட ஊக்கத்திற்கும் உள்ள பலனைத் தன் சொந்தத்துக்கு அடையாமல் போனதில் நமக்குச் சிறிதும் ஆச்சரியமில்லை. ஏன்? தனக்கென வாழாதார்தான் பிறர்க்கு என வாழ முடியும். ஆதலால், நடேசன் அவர்களால் தமிழ்மக்களுக்கு எண்ணரிய நன்மைகள் ஏற்பட்டிருப்பதை, அவரது எதிரிகளும் மறுக்கார். நாம் ஒவ்வொருவரும் நடேசனே ஆக நாடுவோமாக!”

தந்தை பெரியார் காட்டிய வழியில், நாம் ஒவ்வொருவரும் நடேசனார் ஆவதே தமிழ் நிலத்துக்கு நாம் காட்டும் நன்றியாக இருக்கும்.

**...குரல் ஒலிக்கும்**

## ‘பெரியாரை ஏந்தட்டும்’, பெண்கள்!

**உ**லகின் பணக்கார நாடுகளில் ஒன்று தென்கொரியா. அந்த நாட்டின் புதிய சிக்கலாக குழந்தைப்பிறப்பு விகிதக் குறைவும், தனித்து வாழும் நடுத்தர வயதினர் மரணமும் அதிகரித்து வருகின்றன. இதற்குக் காரணம், தென்கொரியாவில் பெரும்பாலான இளம்தலைமுறையினர் திருமணம் செய்யாமல் வாழ்வதுதான்.

இதையடுத்து, மக்கள் திருமணம் செய்துகொள்ளவும், குழந்தைகள் பெற்றுக்கொள்ளவும், பல சலுகைகளை அரசு அளித்து வருகிறது. திருமணம் செய்துகொண்ட பின்னர், மானிய உதவிகளும் வழங்கப்படுகின்றன. ஆனால், ‘தங்களின் கர்ப்பப்பை ஒன்றும் பொதுச் சொத்து அல்ல, பெண்கள் குழந்தை பெறும் இயந்திரங்களும் அல்ல’ என்று அரசுக்கு எதிராக தென்கொரிய பெண்கள் முழக்கங்களை முன்வைக்கின்றனர். இதற்காக ‘4-பி இயக்கம் (4-B movement) என்ற பெயரில் ஒருங்கிணைந்து போராடுகின்றனர்.

ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கு ஊதியம் மறுக்கப்படுவதை, இந்த இயக்கம் கடுமையாக எதிர்க்கிறது. ‘திருமணம், குடும்ப அமைப்பு, தாய்மை அடைதல், கலாசாரப் புனிதங்களைப் பாதுகாத்தல் ஆகிய கட்டாயங்களைவிட, பொருளாதார சுதந்திரமே பெண்களுக்கு முக்கியம்’ என்று கூறுகிறது ‘4-B’ movement’. குறிப்பாக, பெண்கள் தங்களை அழகுபடுத்திக் கொள்வது, அழகு சிகிச்சைகளை எடுத்துக்கொள்வது, ஆடைக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றுவது போன்ற எண்ணங்களில் இருந்து விடுபட வேண்டுமென்றும் பேசுகிறது இந்த இயக்கம்.

கொரியாவில் முளைத்த இந்த இயக்கம், இப்போது அமெரிக்காவிலும் பரவத் தொடங்கியுள்ளது. ஜனநாயகமற்ற குடும்ப அமைப்புக்கு எதிராக, ‘பெரியார் முன்வைத்த பெண்ணுரிமைக் கொள்கைகள் இன்று உலகமயமாகிக் கொண்டுள்ளன’ என்பதையே, இந்தப் போராட்டங்கள் சொல்கின்றன. போராடும் பெண்கள் பெரியாரை ஏந்தினால், போராட்டம் அர்த்தம் பெறும்!

## ஃப்ளாஷ்பேக்



வழக்கறிஞர் சென்னியப்பன்



**‘பெரியார் படச் சிறப்புக் காட்சியில்!’**

2007-ஆம் ஆண்டு, ‘பெரியார்’ திரைப்படம் வந்த போது, அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு, சிறப்புக் காட்சி திரையிடப்பட்டது. சிறப்புக் காட்சியைப் பார்க்கச் சென்றிருந்த நான், படம் முடிந்து வெளியே வந்து நின்று கொண்டிருந்த நேரத்தில், தலைவர் அவர்களும் வெளியே வந்தார். நான் அவர் பின்னால் நின்று கொண்டிருந்த நிமிடத்தில், தற்செயலாக இந்தப் படம் எடுக்கப்பட்டது. இந்தப் புகைப்படத்தை பொக்கிஷமாக நான் பாதுகாத்து வருகிறேன்.

**– வழக்கறிஞர் சென்னியப்பன், திராவிடர் கழகம், ஈரோடு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### ரயில்வே உணவு விடுதிகளில் பாகுபாடு!

1941-ஆம் ஆண்டு வாக்கில் நீதிக்கட்சி, பெரியார் தலைமையில் இயங்கி வந்தது. அப்போது, தனியார் நிறுவனங்களாக இயங்கிய ரயில்வேயில், சிற்றுண்டிச் சாலைகள் பார்ப்பனர்களுக்கு மற்றும் பார்ப்பனர் அல்லாதவர்களுக்கு என தனித்தனியாக இயங்கின. இதைக் கடுமையாக எதிர்த்த பெரியார், ‘விடுதலை’ இதழில், ‘இந்திய கவர்மென்டார் கவனிப்பார்களா?’ என்று தலையங்கம் எழுதினார். இதன் பின்னரே ‘எம்.எஸ்.எம்’ என்கிற பெயரில் இயங்கிய ரயில்வே நிறுவனம், உணவு விடுதிகளில் இருந்த ‘பிராமணர்கள் சாப்பிடும் இடம்’ என்கிற ‘போர்டை’ அகற்றியது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

665

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131